பக்கங்கள் 11 + 3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 06 சனிக்கிழமை 21.12.2024 அதிர்வு 141

## காலியில் ஒருவர் சுட்டுப் படுகொலை

### மூன்று கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவிப்பு

காலி – தடல்ல பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்



02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் துயரம்

# வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்த பஸ்

## மூவர் மரணம்

## 47 பேர் காயம்

(க.கிஷாந்தன்)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் மல்லியப்பூ சந்திக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், 47 பேர் காயமடைந்துள்ளனர்.

02▶

# 28 நாடுகளுக்கு விஜயம் செய்து 52 கோடி ரூபாவை ஏப்பமிட்ட ரணில்

(ந.லோகதயாளன்)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 28 நாடுகளுக்குப் பயணித்துள்ளார் எனவும், இதனால் 52 கோடியே 14 இலட்சத்து 47 ஆயிரத்து 975 ரூபா செலவு ஏற்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்குத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கான பதிலிலேயே இந்த விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

28 பயணங்களுக்கான விமானச் சீட்டை, தங்குமிட வசதி மற்றும் உணவு உட்பட சகல செலவுகள் என்ற வகையிலேயே இந்தக் கட்டணம் செலவிடப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்காவின் காலத்தில் விண்ணப்பிக்கப்பட்ட

02▶





# ரோஹிங்யர்களை நேரில் சென்று நலன்களை விசாரித்த ரிசாத் எம்.பி.!

(ஹஸ்பர் ஏ.எச்.)

மியன்மார் ரோகிங்யர்கள் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நலன்களை விசாரிக்கவும் அவர்களுக்கு தேவையான விடயங்களை செய்து கொடுப்பது தொடர்பிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் இன்று (21) நேரில் விஜயம் செய்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய இவர்கள் படகுடன் நேற்று (20) திருகோணமலை அஷ்ரப் துறை முகத்துக்குக் கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தப் படகில் 115 நபர்களில் மாலுமிகள் உட்பட அதன் உதவியாளர்கள் 12 பேருக்கு எதிராகக் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

இவர்'கள் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14 நாள்களுக்கு தடுப்புக் காவலில் வைக் குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் சலாம் சாஹிர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இவர்கள் மிரிகானையில் உள்ள அகதிகள் தங்குமிடத்துக்கு அழைத்து செல்லப்படவுள்ள நிலையில், தற்காலிகமாக குறித்த பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

---

## வீதியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் பகுதியிலிருந்து கண்டி பகுதிக்குப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் 5 வயது மதிக்கதக்க சிறுவன் ஒருவனும், வயோதிபர்கள் இருவரும் (ஆண் ஒருவரும் - பெண் ஒருவரும்) மொத்தமாக மூவர் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்தில் பஸ் சாரதி உட்பட 47 பேர் காயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சிலர் கண்டி மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைகளுக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## காலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேற்படி நபர் மூன்று கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நபர் அண்மையில் மற்றொரு நபருடன் தகராறில் ஈடுபட்டார் எனவும், அந்தத் தகராறே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர், மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் தமது மனைவியுடன் பயணித்த மேற்படி நபர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேகநபர்கள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்கள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

---

## 28 நாடுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் அறியும் சட்டத்தின் கீழான விண்ணப்பத்துக்கு அப்போது பதிலளிக்காதமையால் மேன்முறையீட்டின் பின்னர் தகவல் அறியும் ஆணைக்குழுவின் கவனத்துக்கமைய 2024.08.29 அன்று இடம்பெற்ற விசாரணைக்கமைய நவம்பர் மாதம் இந்த விபரம் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**20, 21, 22/12/2024**

100$ க்கு மேல் கொள்வனவு செய்து 10lb Kushbu basmathi rice bag யை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்




1139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விஜித ஹேரத் விடும் கதை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயம் குறித்து தெளிவூட்டும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அங்கு கருத்து வெளியிட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் புது விதமான விளக்கம் ஒன்றை முன்வைத்திருக்கின்றார்.

கடந்த முப்பத்தைந்து வருடங்களாக இலங்கைத் தரப்புடனான பேச்சுகளில் எல்லாம் இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான நடைமுறையாக்கம் குறித்துக் குறிப்பிடும் இந்தியா, இம்முறை கூட்டறிக்கையில் அதனைச் சுட்டிக் காட்டவில்லை. அல்லது இரு தரப்பு கூட்டறிக்கை என்பதனால் அதனை இம்முறை சுட்டிக்காட்ட இலங்கைத் தரப்பு இணங்கவில்லைப் போலும்.

அதனை தங்கள் அரசின் தனித்துவம் போல காட்ட முயலுகின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர்.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியாவுடனான கூட்டு அறிக்கையில் தகவல் வெளியிடப்படவில்லை. ஏனென்றால் எமது நாட்டின் அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் அது பற்றி இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை. அரசமைப்பின் பிரகாரம் செயற்பட வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு." - என்று அவர் கூறுகின்றார்.

இதன் மூலம் அமைச்சர் விஜித ஹேரத் என்ன கூற வருகின்றார் என்ற வினா வெழும்புகின்றது.

'நமது நாடு சுயாதீன, இறைமையுள்ள, தனித்துவமான நாடு. அதன் இறைமைப்படி, தனது நாட்டின் அரசமைப்பு விவகாரத்தை அது தன்பாட்டில் நிறைவேற்றிக் கொள்ளும். அதில் இந்தியா உட்பட பிற நாடு எதுவும் தலையிடக் கூடாது. தலையிட முடியாது.' - என்ற இறுமாப்புத் தொனிக் கருத்தைத்தான் தமது பதவிக்குரிய இராஜதந்திரச் சொல்லாடல்களில் அவர் 'போட்டுப் பிடிக்கின்றார்' - என்று தோன்றுகின்றது.

அதனால் அவரிடம் சில கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கின்றது.

✦ 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதே அயல் நாடான இந்தியாவின் கடும் அழுத்தத்தினால் என்பதை புதிய இலங்கை அரசு மறந்து விட்டதா?

✦ தனது நாட்டின் அரசமைப்பை தனது நாடு பார்த்துக் கொள்ளும் என்ற சாரப்பட்ட தொனியில் கருத்து வெளியிடும் கொழும்பு அரசின் பிரதிநிதி, தனது நாட்டின் அரசமைப்பிலும், உள் விடயங்களிலும் நேரடியாகத் தலையிடும் விடயங்களை உள்ளடக்கிய சர்வதேச ஒப்பந்தம் ஒன்றைத்தான், இப்போதும் பிரதான பேசுபொருளாக நீடிக்கும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற பெயரில் 37 ஆண்டுகளுக்கு முன்னர் செய்து கொண்டது என்பதை மறந்து விட்டாரா?

✦ சரி, அப்போது முதல் அதனை எதிர்த்த தரப்பினரே தாங்கள் என்று அவர் இப்போது கூறுவாராகில், இப்போது தாங்கள் ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வந்துள்ள சூழ்நிலையில், அந்த ஒப்பந்தத்தையும் அதனால் நாடு மீது விதிக்கப்பட்டுள்ள கடப்பாட்டுப் பொறுப்பையும் தூக்கிக் கடாசுகின்றோம் என்று பகிரங்கமாக ஓர் அரசு என்ற முறையில் அறிவிக்க இலங்கை அரசுத் தரப்பு இப்போதாவது தாயாரா?

இந்தியாவின் கடும் இராஜதந்திர அழுத்தத்தினால் இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை இலங்கை கொண்டு வந்தமையை மறந்து - அதன் காரணமாகவே இலங்கை அரசமைப்பின் அந்த 13 ஆவது திருத்த ஏற்பாடுகளின் முக்கிய பிரிவுகளை, ஷரத்துகளை கொழும்பு அரசு கடந்த 36 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தாமல் அரசமைப்பை உதாசீனம் செய்து வருவதை மறந்து - அதன் காரணமாகவே 13 ஆவது திருத்தம் உட்பட்ட முழு அரசமைப்பினதும் நடைமுறையாக்கம் பற்றி இம்முரையும் இந்தியப் பிரதமர் மோடி கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிப்படையாகவே வலியுறுத்தினார் என்பதை வசதியாகப் புறமொதுக்கி - 'கதை பேசுகின்றார்' அமைச்சர் விஜித ஹேரத். 'இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை' என்றும் கதை விடுகின்றார் அவர்.

# இலங்கையிலுள்ள இஸ்ரேலியர்களை வெளியேற்றக் கோரி ஆர்ப்பாட்டம்












(றிபாஸ்)

இலங்கையில் தங்கியிருக்கும் இஸ்ரேலியர்களை வெளியேற்றக் கோரியும் பலஸ்தீனுக்கு எதிரான இனப் படுகொலைகளை உடனே நிறுத்தக் கோரியும் இலங்கை அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை (20) ஆர்ப் பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் முன்னிலை சோசலிசக் கட்சியின் சார்பில் துமிந்த நாகமுவ, மக்கள் போராட்ட அமைப்பிலிருந்து ஸ்வஸ்திகா, ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தலைமைத்துவ சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான், முஸ்லிம் முற்போக்கு சக்தி மிப்லால் மௌலவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறைச்சாலை பஸ்ஸில் இருந்து சந்தேகநபர் தப்பியோட்டம்!

## சம்மாந்துறை நீதிமன்ற வளாகத்தில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் தப்பி ஓடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது தப்பிச் சென்ற சந்தேக நபரை பொலிஸார், சிறைச்சாலை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.



28 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்காக சிறைச்சாலை பஸ்ஸில் அழைத்து வரும் போது இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

தப்பி சென்ற சந்தேக நபர் சம்மாந்துறை உடங்கா 02 பகுதியைச் சேர்ந்த ரிசாத் முகம்மட் சாதிக் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 07 திகதி இந்தச் சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார். சம்பவம் தொடர் பில் விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு

## உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தகவல்

அமைச்சர்களது உத்தியோகப் பூர்வ இல்லங்களில் பாதியை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்குவதற்கு எதிர்பார்த்துள்ளனர் என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அதற்காகப் பழங்கால மதிப்புகள் கொண்ட அமைச்சர்களின் இல்லங்கள் ஒதுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இல்லங்கள் தொடர்பில் விசேட கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# தாமரை கோபுரத்தை இயக்கும் நேரத்தை நீடிக்கத் தீர்மானம்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு தாமரை கோபுரத்தை இயக்கும் நேரத்தை நீடிக்க அதன் நிர்வாகம் முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்துக்கான நீட்டிக்கப்பட்ட இயக்க நேரத்தையும் அறிவித் துள்ளது.

அதன்படி, தாமரை கோபுரம் டிசெம் பர் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் நள்ளிரவுவரை பொது மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படும் எனவும் டிசெம்பர் 27 ஆம் திகதி காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 31 மற்றும் ஜனவரி முத லாம் திகதியன்று காலை 9 மணி முதல் ஜனவரி 2 ஆம் திகதி மதியம் ஒரு மணி வரை திறந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.










# சந்நிதியான் ஆச்சிரமத்தில் முருகன் நாமம் பஜனை!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நேற்று வெள்ளிக்கிழமை தெய்வீக முருக நாம பஜனை இடம் பெற்றது.

தெய்வீக முருகன் நாம பஜனையை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் பக்கவாத்தியங்கள் சகிதம் பாடி ஆச்சிரம தொண்டர்கள், பக்தர்களை பரவசமூட்டினார்.

இதில் கீபோட் இசையை கலைமணி நடேசு செல்வச்சந்திரனும் மிருதங்க இசையை நாதமணி க.நந்தகுமாரும் தபேலா இசையினை வித்துவான் ஆ.பிரபாவும் வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் அடியவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# சட்டவிரோத நிதி முன்மொழிவு செய்த நிறுவனங்களுக்கு எதிராக விசாரணை

### *இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு*

சட்டவிரோத நிதி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்திய 20 நிறுவனங்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவற்றில் சில நிறுவனங்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கு எதிரா கச் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கை மத்திய வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# இரண்டு பிள்ளைகளின் தந்தை களுத்துறையில் சடலமாக மீட்பு!

களுத்துறை, கட்டுகுருந்த பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பயாகல பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது கொலையாக இருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

களுத்துறை கட்டுகுருந்த சனசமாவத்தையில் வசிக்கும் பத்தரமுல்ல கிராமத்தைச் சேர்ந்த அமித் பிரியதர்ஷன (வயது – 36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு ஒன்றில் மர்மமான முறையில் ஒருவர் இறந்து கிடக்கிறார் என்று கிடைத்த தகவலின் பேரில் பொலிஸார் சென்று பார்வையிட்டுள்ளனர்.

சடலம் வீட்டின் அறையில் தலைகீழாகக் கிடந்துள்ளது. சடலத்தின் மார்பு மற்றும் வயிற்றில் ஆழமான காயங்கள் காணப்பட்டன என்று விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த கொலை தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். பயாகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்நாட்டு விவசாயிகளுக்குப் பாதிப்பின்றி அரிசி இறக்குமதி மேற்கொள்ளப்படும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



உள்நாட்டு விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாதவாறு அரிசி இறக்குமதி மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அமைச்சரவை பேச்சாளரும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசி இறக்குமதி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப் படவுள்ள நிலையில் கருத்து வெளியிட்ட அவர், இலங்கைக்கு தற்போது அரிசி 22 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அந்த அரிசியை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது. மேலும் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கிடைக்கவுள்ளது.

சந்தையின் தேவையைக் கருத்தில் கொண்டு அரிசி இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதியை நீடிப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

உள்நாட்டு விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதவாறு அரிசி இறக்குமதி மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் செயற்பாடு சில கட்டுப்பாடுகளுடனே இடம்பெறு கின்றது.– என்றார்.

# வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் பிரதமர் ஹறிணி அமரசூரியவுடன் சந்திப்பு



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக் கலநாதனுக்கும், பிரதமர் ஹறிணி அமல சூரியவுக்கும் இடையில் சந்திப் பொன்று இன்று (21) சனிக்கிழமை பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற் றது.

இதன்போது தலைமன்னார் பகுதி யில் இராணுவம் பொலிஸ், மற்றும் கடற்படையால் கையகப்படுத்தியுள்ள மக்கள் காணிகள், பொது இடங்கள், ஆலயங்களுக்கு சொந்தமான காணி களில் இருந்தும் அரசபடைகள் வெளி யேறி மக்களது பாவனைக்காக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதேவேளை, ஐயப்ப பக்தர்களால் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம், இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஐயப்ப சாமி பக்தர்கள் செல்லவுள்ள நிலையில் தமது யாத்திரிகைக்காக இந்திய பய ணத்துக்கான விமான கட்டணம் அதிகரித்த வண்ணம் உள்ளதையும், அதனை குறைக்க நடவடிக்கை எடுக்கு மாறும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கடவு சீட்டை பெறுவதற் காக பக்தர்கள் எதிர்கொள்ளும் பிரச் சினைகள் தொடர்பிலும் தெரிவிக்கப் பட்டது.

தமது பயணத்தின் நிமித்தம் கொழும்பு நகருக்கு பல அசௌகரி யங்களுக்கு மத்தியில் வந்து இந்து கலாச்சார அமைச்சிடம் கையெழுத்து பெற்ற பின்னரே கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதன் அடிப்படையில் பிரதமர் ஹறிணி அமல சூரியவுடனான ான இன்றைய சந்திப்பு பிரதமரின் அலு வலகத்தில் இடம்பெற்றது. பிரதமரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த கோரிக்கைகளை முன்வைத்தார்.

இதன் போது தலைமன்னாரில் இருந்து மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட பிரதிநிதிகளும், ஐயப்ப சாமி பக்தர்கள் சிலரும் நாடா ளுமன்ற உறுப்பினருடன் பிரதமரை சந்தித்துள்ளனர்.





# இறந்து போன மனிதநேயம் உயிர்த்தெழும் மிருகத்தனம்!

**சிந்துஜா சதீஸ்வரன்,**
2 ஆம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய சூழலில் மனிதன் என்ற வார்த்தைக்கு ஒரே பொருள் மிருக குணம் கொண்ட இரண்டு கால் கொண்ட மனம் புழுத்த பிணங்களை குறிக்கிறது.

மனிதநேயம் என்ற வார்த்தைக்கு இனி மனித மனங்களிலோ, அவர்களின் வார்த்தைகளிலோ கூட இடம் இருக்கும் என்று நம்புவது மிகப்பெரும் முட்டாள் தனம் என்பது இன்றைய அன்றாட வாழ்க்கை நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின்ற பாடம் என்பது நிதர்சனம்.

சக மனிதனை நாம் மனிதனாக பார்க்காவிட்டால் கூட பரவாயில்லை. ஆனால் உயிரும், உணர்வும் உள்ள ஒரு ஜீவன் என்றாவது எண்ணுவதற்கு ஏன் நம் புத்தியோ நம் இதயமோ இடமளிக்கவில்லை என்பது வேதனையான ஒன்று.

மனித மனங்கள் இன்று மலத்தை விடவும் நாற்றம் அடிக்கும் சாக்கடையாக இருக்கின்றன என்பதை நினைத்துப் பார்பதற்குகூட நமக்கு நேரம் இல்லை. இவ்வளவு பரபரப்பாக எதை தேடி, எதை காப்பாற்ற எண்ண இவ்வளவும் அலைந்து கொண்டு இருக்கிறோம் என்று தெரியாமலேயே வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

தடுக்கி விழுந்தவனைக் கைகொடுத்து எழுப்பி விடுவதற்கோ, பிழை செய்தவனை அன்புடன் அரவணைத்து ஆதரவு காட்டித் திருத்தவோ நாம் இன்று சிறு முயற்சிகள் கூட எடுக்க விருப்பப்படுவதும் இல்லை. நம் முன்னால் ஒருவன் ஓடினால் அவனைத் தடுக்கி விழவைத்து சிரித்து அவனை வேதனைப்படுத்துவதில் தான் நாம் முன்னோடியாக இருக்கின்றோம்.

இன்றைய நிலையில் நம் அனைவருக்கும் கையில் துப்பாக்கியை தந்து உங்களுக்கு பிடிக்காதவர்களை இந்த ஒரு வாரத்தில் கொல்லலாம் என்று கட்டளையிட்டால் அடுத்த நிமிடமே ஒரு மனிதனும் மிஞ்ச மாட்டான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒரு நிமிடம் மனம் கொண்டு நமக்கு பிடித்தவர்களிடம் பேசவோ, இன்னொருவரின் வேதனையை கேட்டு கண்ணீர் விடவோ இன்று ஒருவருக்கும் நேரமில்லை. அந்த ஒரு நிமிடம் கிடைத்தால் ஒரு வாடிக்கையாளர் முன் குரங்கை போல் வேடிக்கை காட்டி அவனை மடையனாக்கி 5 ரூபா சம்பாதிக்கத்தான் யோசிக்கிறோம்.

இன்று பணம் என்ற ஒரு விடயத்துக்காக நாம் நேரடியாக, மறைமுகமாக பலபேரை வேதனை மற்றும் துயரங்களை அனுபவிக்க வைக்கிறோம். பல நேரங்களில் பலரையும் கேவலப்படுத்துகிறோம். பணம் இல்லாதவனைக் கையால் ஆகாதவன் என்றும், பிச்சைகாரனை போலவும் காத்திருக்க வைத்து வேடிக்கைகாட்டுகிறோம்.

மற்றொருவர் படும் வேதனை அவர்கள் வாழும் சூழ்நிலை, அவர்களுக்கு வேண்டிய தேவைகள் என எதுவும் நாம் அறியவேண்டிய நிர்பந்தம் இல்லை என்ற ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் தான் இன்று நமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அடைபட்ட சுவருக்குள் இருக்கிறோம்.

நமது அடுத்த தலைமுறைக்கும் இந்த விச எண்ணங்களை பிஞ்சு மனங்களில் சிறு வயது முதல் விதைக்கின்றோம். நாம் செய்யும் வினைகள் அனைத்தும் பிற்காலத்தில் திரும்பவும் நமக்கே வரும் என்று யோசிப்பதும் இல்லை. நல்ல குணமோ, இரக்க குணமோ அல்ல பணம்தான் சம்பாதிக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப்படும் ஒவ்வொரு குழந்தையும் எதிர்காலத்தில் உங்கள் உபயோகங்கள் முடிந்தவுடன் உங்களையும் அதே போல தூக்கி எறியும் என்பதையும் நினைவில் வைத்து கொண்டாலே பாதி பிரச்சினை தீர்ந்து விடும்.

ஒரு காலத்தில் மனித மனங்களில் விரக்தி குறைவாகத்தான் இருந்தது என்பது உண்மை. இன்று உதவும் குணம் என்பது அரிதாகிவிட்டது. அடுத்தவர் துயர் கண்டு கண்ணீர் விடும் மனங்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு சுருங்கி விட்டன என்பது உண்மை. இன்று பக்கத்து வீட்டில் நடகும் துயரங்கள் கூட ஏதோ ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் நடந்தைப் போலவும், அறியாததைப் போலவும், அமைதியாகக் கதவுகளை மூடி விட்டு உள்ளே சிரித்து விளையாடி கொண்டிருக்கின்றோம்.

சொந்தங்களின் மரணங்கள், நண்பர்களின் பிரிவுகள் என எதுவும் நம்மை அதிர்ச்சி அடையவோ, வேதனை அடையவோ செய்வதில்லை. அதைப் பணம், அல்லது அவர்களின் அந்தஸ்துதான் தீர்மானிக்கின்றது என்பதும் பழக்கமாகி விட்டது.பக்கத்து வீட்டில் யாரேனும் இடும் மரண ஓலங்கள் கூட நம்மைப் பெரிதும் தூண்டுவது இல்லை. இத்தனை கொடூரமான மனிதராக வாழ்ந்து எதை சாதித்து விடப் போகிறோம்.

அடுத்தவரின் வேதனைகளை கூட வேடிக்கை பார்ப்பதில் நமக்கு அவ்வளவு ஆனந்தம். பத்து குழந்தைகள் ஒரு விபத்தில் சிக்கி கொண்டனர் என்பதை கூட பெரிதாக கவனஞ் செலுத்தாமல் அடுத்த சேனலை சீக்கிரம் மாற்றி திரைபடத்தில் வரும் கற்பழிப்பு காட்சியை ரசனையுடன் பார்க்கும் நல்ல மனிதர்களாக நாம் மாறிக்கொண்டு இருக்கிறோம் என்பது எவ்வளவு கேவலம். அந்த குழந்தைகளின் நிலை என்னவென்றோ, அவர்களின் வேதனை என்னவென்றோ நாம் சிந்திப்பது இல்லை. அதை பற்றி அடுத்தவரிடம் ஒரு மனக் குமுறலை வெளிப்படுத்த உண்டான மனம் கூட நம்மிடம் இல்லை. நமக்கு வரும்வரை அனைத்தும் நமக்கு ஒரு பொழுது போக்கு விடயம் மட்டுமே என்றே கடந்து போகிறோம். அதில் வரும் எந்த அதிர்ச்சியோ, வேதனையோ நம்மை எவ்விதத்திலும் பாதிப்பது இல்லை. நாம் மனிதர்கள் அல்ல மனித மிருகம் என்று நிரூபிக்க இது போதும்.



# இலங்கை கடல் கொள்ளையர்கள் நாகை மீனவர்கள் மீது தாக்குதல்

## மூன்று பேர் மருத்துவமனையில் அனுமதி

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்களை கடுமையாக தாக்கி அவர்களிடமிருந்து வலை உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர் என தமிழக ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நாகை மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் இருந்து அக்கரைபேட்டையை சேர்ந்த விஜயகுமார் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் நேற்று மதியம் 3 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கே ராஜ்குமார், ராஜேந்திரன், நாகலிங்கம் ஆகிய 3 மீனவர்களும் இன்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு 2 பைபர் படகில் வந்த 6 இலங்கை கடற்கொள்ளையர்கள் இவர்களது படகை வழிமறித்தது



மீனவர்களை கத்தி மற்றும் கட்டையால் தாக்கிவிட்டு படகில் இருந்த மீன்கள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பறித்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டனர்.

தாக்குதலில் இருந்து தப்பிய மூன்று மீனவர்களும் உடனடியாக அவசரம் அவசரமாக கோடியக்கரை கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து சக மீனவர்கள் மீட்டு வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

இதில் ராஜேந்திரன் என்பவருக்கு தலையில் வெட்டுகாயம் ஏற்பட்டுள்ளது. ராஜ்குமார் என்பவருக்கு தலையில் வெட்டுக்காயம் மற்றும் கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

நாகலிங்கம் என்பவருக்கும் உள் காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயம் அடைந்த 3 மீனவர்களும் வேதாரண்யம் அரசு மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழக மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்கொள்ளையர்கள் மீன்பிடிவலை, ஜி.பி.எஸ். கருவி, செல்போன் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் 3 லட்சம் மதிப்புள்ள பொருள்களை பறித்து சென்றுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் மீனவ கிராமங்கள் இடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஜெய்ப்பூர் எரிபொருள் நிரப்பு நிலைய விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு





ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில், ஜெய்ப்பூர்-அஜ்மீர் நெடுஞ்சாலையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று காலை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு இரசாயனம் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று மற்றுமொரு வாகனத்தின் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று காலை நிலவரப்படி இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளதோடு 40 இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்ச ரூபா நிவாரண நிதி வழங்குவதாக ராஜஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த தீ விபத்தில் டேங்கர் லொறிகள் மற்றும் கன்டெய்னர் லொறிகள், பஸ், ஆட்டோ, கார், மோட்டார் சைக்கிள் என மொத்தம் 37 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஜெர்மனியில் கிறிஸ்மஸ் சந்தையில் மக்கள் கூட்டத்தின் மீது மோதிய கார்

## இருவர் பலி; 63 பேர் காயம்

ஜேர்மன் - மெக்டபேர்க் கிறிஸ்மஸ் சந்தையில் கார் ஒன்று மக்கள் கூட்டத்தின் மீது மோதியதில் சிறுவர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

அத்துடன் 68 பேர் காயமடைந்துள் ளதுடன் அவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரி விக்கப்படுகிறது. காரை செலுத்திய 50 வயதான சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார். அவர் சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் என தெரியவந்துளளது.

# ஏவுகணைத் தாக்குதலில் ஐ.எஸ். தலைவர் பலி!





சிரியாவில் நடத்தப்பட்ட ஏவுக ணைத் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபு யூசிப்ஃ கொல்லப்பட்டுள்ளார் என அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபு யூசிப்பை (Abu Yusif) குறிவைத்து அமெரிக்கப் படைய ணிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்போது, சிரியாவில் 8,000 இற்கும் அதிகமான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர்கள் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங் கள் தெரிவிக்கின்றன.

# நேபாளத்தில் நில அதிர்வு


நேபாளத்தில் இன்று அதிகாலை நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

4.8 மெக்னிடியூட் அளவில் இந்நில அதிர்வு பதிவானதாகத் தேசிய புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

முன்னதாக கடந்த 2015ஆம் ஆண்டு 7.8 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தொடர் நில அதிர்வுகளால் சுமார் 9,000 பேர் வரையில் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 21/12/2024

## ரொறன்ரோ மக்களுக்கு பயண அறிவுறுத்தல்

கனடாவின் ரொறன்ரோவைச் சேர்ந்த மக்களுக்கு பயண அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

02



# ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## கவிழும் அபாயத்தில் கனடா அரசு

**கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர, ஆளும் கட்சியின் கூட்ட ணிக்கட்சியாக இருந்த கட்சி ஒன்றின் தலைவர் திட்டமிட்டுள்ளார்.**

**அதனால், கனடாவில் ஆட்சி கவிழும் அபாயம் ஏற்பட்டுள்ளது!**

**New Democratic கட்சியின் தலை வரான ஜக்மீத் சிங், ஜனவரி மாதம் 27ஆம் திகதி, மீண்டும் நாடாளுமன்றம் கூடும்போது, ஜஸ்டின் ட்ரூடோ அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.**

**ஏற்கனவே, ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகவேண்டுமென கனடாவில் கோரிக்கை வலுத்துவருகிறது.**

கனடாவில் அடுத்த பொதுத்தேர்தல் 2025 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நடத்தப்பட உள்ளது.

அப்படி தேர்தல் நடைபெற்றால், தேர்தலில் ஆளும் ட்ரூடோவின் லிபரல் கட்சி படுதோல்வி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.இப்படிப் பட்ட ஒரு சூழல் நிலவும் நிலையில், திடீரென ஜக்மீத் சிங் கட்சி, ட்ரூடோ மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முடிவு செய் துள்ளது.

ஜக்மீத் சிங் நேற்று இது தொடர்பாக வெளியிட்ட கடிதத்தில், ஒரு பிரதமராக, மக்களுக்காக பணியாற்ற வேண்டும், பலம் படைத்தவர்களுக்காக அல்ல என்னும் மிகப்பெரிய பணியில் ஜஸ்டின் ட்ரூடோ தோற்றுவிட்டார்.

ஆகவே, அவரது அரசைக் கவிழ்க்க NDP கட்சி வாக்களித்து, கனேடியர்கள் தங்களுக்காக உழைக் கும் ஒரு அரசைக் கொண்டு வருவதற் காக வாக்களிக்க வாய்ப்பை உருவாக் கும் என்று தெரிவித்துள்ளார்.

எனவே, ஜக்மீத் சிங் கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்குமானால், அமெரிக்காவில் ட்ரம்ப் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாள்களில் கனடாவில் ட்ரூடோ அரசு கவிழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.





# அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் அமைச்சரவையை மாற்றுகிறார் ட்ரூடோ



கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விரைவில் ஒரு பெரிய அமைச்சரவை மாற்றத்தை அறிவிப்பார் என்று கனேடிய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ட்ரூடோ பதவியேற்பு விழாவில் பங்கேற்பார் என்றும் தனது புதிய அமைச்சரவையுடன் ஒரு கூட்டத்திற்கு தலைமை தாங்குவார் என்றும் பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

சுமார் 10 ஆண்டுகாலம் பிரதமர் பதவியில் இருக்கும் ஜய்டின் ட்ரூடோவின் புகழானது பணவீக்கம், குடியேற்றம் பற்றிய கவலைகளால் சரிந்துள்ளது.

மேலும் கடந்த திங்களன்று அவரது நிதியமைச்சர் திடீரென பதவி விலகியமை ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கத்தில் பாரிய சிக்கலை ஏற்படுத்தியது.

ட்ரூடோவின் ஆளும் தாராளவாதிகள் ஆட்சியில் நீடிக்க நம்பியிருக்கும் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரான ஜக்மீத் சிங், பிரதமரை இராஜினாமா செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

ஆனால் புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சர் டொமினிக் லெப்லாங்க், ட்ரூடோவுக்கு அவரது அமைச்சரவையின் முழு ஆதரவு உள்ளது என்றார்.

இந் நிலையில், விரைவில் இடம்பெறும் மாற்றத்தில் தற்போதைய 35 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையில் 2025 இல் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று சூசுமமாக வெளிப்படுத்தியவர்களுக்கு பதிலாக புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ஏனையவர்கள் அரசாங்கத்தில் இரட்டை அல்லது மூன்று பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.





## ரொறன்ரோ..


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் ஏற்படக்கூடிய கடுமையான பனிப்பொழிவு நிலைமைகள் காரணமாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தாழமுக்க நிலைமையினால் கூடுதல் அளவில் பனிப்பொழிவு ஏற்படக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக வீதிப் போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படக்கூடும் எனவும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணம் செய்ய வேண்டும் எனவும், பயணத் திட்டங்களை மாற்றிக் கொள்வது பொருத்தமானது என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




# கனடாவில் பாடசாலைகளுக்கு மிரட்டல் விடுத்த சிறுமி கைது

கனடாவில் பாடசாலைகளுக்கு மிரட்டல் விடுத்த சிறுமியொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

13 வயதான சிறுமியொருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் வின்னிபெக் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இரண்டு பாடசாலைகள் மீது இந்த சிறுமி மூன்று அச்சுறுத்தல்கள் விடுத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹோக் பார்க் பாடசாலை மற்றும் இல்ம்வுட் உயர் நிலை பாடசாலை என்பனவற்றுக்கு இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடத்துவதாக இந்த சிறுமி அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் ஏனைய சில பாடசாலைகளிலும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

லோரன்ஸ் அவன்யூ மற்றும் ஹோர்டன் பார்க் வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டு பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சமப்வ இடத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் இருந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.